# நீர்வளத் துறை

**மக்கள் சாசனம்**

2022

# நீர்வளத் துறை

## மக்கள் சாசனம்

### 1.0. நீர்வளத் துறையின் முக்கிய திட்டங்கள் / செயல்பாடுகள்

- தாமிரபரணியாற்றினை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்கும் திட்டம்.
- காவிரி- வைகை - குண்டாறு இணைப்புத் திட்டம்.
- காவிரி வடிநிலத்திலுள்ள பாசன அமைப்புகளின் செயல்திறனை மேம்படுத்தி கடைமடை வரை குறித்த நேரத்தில் தண்ணீர் வழங்குவதை உறுதி செய்யும் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டம்.
- அத்திக்கடவு - அவிநாசி நீரேற்று திட்டம்.
- நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டத்தில் சாத்தியக்கூறுள்ள இடங்களில் தடுப்பணைகள், நிலத்தடி தடுப்புச் சுவர்கள் கட்டுதல்.
- மாநில நிதி, நபார்டு, ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் நீர்நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம்,
  உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம், அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் பருவநிலை மாறுதல்களை தழுவுதல் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் நீர்த்தேக்கங்கள், நீரொழுங்கிகள், கதவணைகள், அணைக்கட்டுகள் போன்ற புதிய பாசன உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் தற்போதுள்ள பாசனக் கட்டமைப்புகள் மற்றும் நீர் நிலைகளை புனரமைத்தல்.
- வெள்ளத் தணிப்புப் பணிகள்.
- உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய நீரியல் திட்டம்.
- நீர்நிலைகளில் படிந்துள்ள வண்டல் மண்ணை இலவசமாக வழங்குதல் மூலம் இழந்த கொள்ளளவை மீளப்பெறுதல்.

## 1.1. தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரங்கள்

- மாநிலத்திலுள்ள 34 பெரிய ஆறுகள், 17 ஆற்று வடிநிலங்களாகவும், 127 உப வடிநிலங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் இயல்பான மழையளவு 960 மி.மீ ஆகும். மாநிலத்தின் மொத்த மேற்பரப்பு நீர்வள ஆதாரம், அண்டை மாநிலங்களிலிருந்து பன்மாநில ஒப்பந்தங்களின்படி பெறப்படும் 268.70 டி.எம்.சி அடி நீரினையும் உள்ளடக்கி, 880.91 டி.எம்.சி. அடியாகும்.

- அரசாணை (நிலை) எண். 155, பொதுப்பணி (ஆர் 1) துறை, நாள். 28.10.2021-ன்படி, மார்ச் 2020-ல் நடத்தப்பட்ட நிலத்தடி நீர்வளம், நுண்ணிய ஆய்வின் அடிப்படையில், மாநிலத்திலுள்ள 1,166 வருவாய்க் குறுவட்டங்களில் 435 குறுவட்டங்கள் அதிநுகர்வு குறுவட்டங்களாகவும், 63 அபாயகரமானதாகவும், 225 மித அபாயகரமானதாகவும், 34 உவர் நீராகவும், 409 பாதுகாப்பானதாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் நிலத்தடி நீர்வள ஆதாரம் 624.74 டி.எம்.சி அடியாகும். நிலத்தடி நீர் வளத்தின் இருப்பு மற்றும் தரம் துறையினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 2.0. நிர்வாக அமைப்பு

- தமிழக அரசு 07.06.2021 அன்று பொதுப்பணித் துறையிலிருந்து நீர்வளத் துறையினை பிரித்து தனித்து செயல்பட ஆணையிட்டுள்ளது.

- முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறையின் பதினொரு தலைமை பொறியாளர்களின் செயல்பாடுகளை கண்காணித்து ஒருங்கிணைத்து வருகிறார் மற்றும் துறையின் தொழில்நுட்ப தலைவராக செயல்படுகிறார்.

- நீர்வளத் துறை ஆற்று வடிநிலங்களின் அடிப்படையில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலைமை ஏற்கும் தலைமைப் பொறியாளர், அவரது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஆற்று வடிநிலங்களின் மேலாளராக செயல்படுகிறார்.

- மேலும், 7 தலைமைப் பொறியாளர்கள், சிறப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

## 2.1. தலைமைப் பொறியாளர்களின் செயல்பாடுகள்

### 2.1.1. மண்டலத் தலைமைப் பொறியாளர்கள்

- மண்டலத்திலுள்ள அனைத்து பாசன அமைப்புகளுக்கும் ஒட்டுமொத்த பொறுப்பாளர்கள் ஆவர்.
- வடிநிலங்களுக்கான நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைதல், பணிகளின் முன்னுரிமையைக் கண்டறிதல், போதிய தரக்கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடித்தல்.
- பாசனக் கட்டமைப்பு மற்றும் அதன் தொடர்பான அமைப்புகளை முன்னுரிமை அடிப்படையில் பராமரித்தல்.
- அனைத்துப் பணிகளிலும் போதுமான தரக்கட்டுப்பாடு முறையினை செயல்படுத்துதல்.
- சிறந்த சுற்றுச்சூழல், பாசனத் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல், பொருளாதார மறுவாழ்வுத் திட்டம் ஆகியவற்றை உறுதி செய்தல்.
- புதிய திட்டங்கள் செயல்படுத்துதல் தொடர்பாக விவசாயிகளுடனும், விவசாயிகள் அமைப்புகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கான நீரொழுங்குமுறை மற்றும் வெள்ளத் தடுப்புப்பணிகள்
- சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.
- கடலோர பாதுகாப்பு நடவடிக்கைகள்

### 2.1.2. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம்

- பெரிய, நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்கள் மற்றும் மாநிலத்திற்குள் நதிகள் இணைப்பு ஆகிய திட்டப்பணிகளை உருவாக்குவதற்கு விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
- திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரித்தல்.
- சுற்றுச்சூழல் குழும வட்டம், திருச்சிராப்பள்ளி மற்றும் அதன் மூன்று கோட்டங்களால் சுற்றுச் சூழல் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

### 2.1.3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்

- நீரியல் மற்றும் நீர்நிலையியல் நிறுவனம் மற்றும் வடிவமைப்பு வட்டம் இவ்வமைப்பின் கீழ் இயங்கி வருகிறது.
- திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் அமைந்துள்ள நீரியல் மற்றும் நீர்நிலையியல் நிறுவனமானது நீரியல், நீர்நிலையியல் மற்றும் கடற்கரை கட்டுமானங்களுக்கான மாதிரிகளைக் கொண்டு ஆய்வு செய்வதோடு மாநிலத்தின் கடற்கரையோரங்களில் ஏற்படும் மாற்றங்களை கண்காணித்தல் மற்றும் கடலோரப் பாதுகாப்புப் பணிகளை ஆய்வு செய்வதையும் மேற்கொள்கிறது.
- தள விவரங்களின் அடிப்படையில் புதிய திட்டப் பணிகளின் தேவையான அனைத்து கூறுகளுக்கும் தற்போதைய பாசன கட்டமைப்புகளின் புனரமைப்பு பணிகளுக்கும் வடிவமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவின் கீழ் செயல்படும் மண் தன்மை ஆராய்ச்சிக் கோட்டம் மண்ணின் தன்மை, கற்காரை மற்றும் கட்டுமானப் பொருட்களின் தரம் குறித்த சோதனைகளை மேற்கொள்ளும் மையத் தரக்கட்டுப்பாடுச் சோதனைக் கூடமாக சென்னையில் செயல்பட்டு வருகிறது. நீர்வளத்துறையின் தெரிவு செய்யப்பட்ட 23 நீர்த்தேக்கங்களின் நீரின் தன்மை மற்றும் சுண்ணாம்பு கசிவு நீர் ஆய்வுகள் ஒவ்வொரு மாதமும் மேற்கொள்ளப்படுகின்றன.
- பொள்ளாச்சியில் அமைந்துள்ள நீர்வடிப்பகுதி மேலாண்மை வாரியக் கோட்டம், தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவு மற்றும் நீர்வடிப்பகுதி மேலாண்மை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு, நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவால் குறைந்துள்ள கொள்ளளவினை கண்டறிந்து வருகின்றது.

### 2.1.4. தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு

- இவ்வலுவலகத்தில் அமைந்துள்ள நீரளவை பிரிவில் வடகிழக்கு பருவமழை காலங்களில் 24 மணி நேர முறைப்பணி மேற்கொள்ளப்பட்டு மாநிலத்தின் அனைத்து அணைகள் / நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் கண்காணிக்கப்பட்டு மாநில அவசரகால நடவடிக்கை மையத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. இம்மையமானது ஒவ்வொரு ஆண்டும், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் தேவைப்படும் கூடுதல் அலுவலர்களின் மாற்றுப்பணி சேவையுடன் வெள்ளம் குறித்த தகவல்களை சேகரிக்கிறது.
- அணைப் பாதுகாப்பு இயக்ககம், மாநிலத்தில் உள்ள நீர்வளத் துறை மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அணைகளின் உறுதித் தன்மை குறித்த அறிக்கைகளை தயாரித்து ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையை மத்திய நீர் ஆணையத்திற்கு அளிக்கின்றது.
- பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, புதிய வாகனங்களை கொள்முதல் செய்தல், பயன்படுத்தவியலாத வாகனங்கள், பயனற்ற இயந்திரங்கள் மற்றும் கருவி தளவாடங்கள் கழிவு நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்கிறது. மேலும் நீர்த்தேக்கங்களின் கதவுகளில் அவ்வப்போது ஏற்படும் அவசரகால சிறு பழுதுப் பணிகளை மேற்கொள்கிறது.
- மாநில திட்ட மேலாண்மை அலகு உலக வங்கி உதவியுடன் அணை சீரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறது.

### 2.1.5. தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்

- இம்மையம், மாநிலத்தின் நிலத்தடி நீர் இருப்பை தொழில்நுட்ப முறையில் ஆய்வு செய்து கால வரையறைகளில் அளவிட்டு வருகிறது.

- நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீருக்கான மாதாந்திர நீரியல், நீர் அளவியல், நிலத்தடி நீர்மட்டம் மற்றும் நீரின் தர அளவுருக்களை தொடர்ந்து கண்காணித்தல்.
- பொது மக்கள், வேளாண் வல்லுநர்கள், அரசுத் துறைகள் மற்றும் தனியார் துறைக்கு தகுந்த இடத்தில் ஆழ்துளை கிணறுகள்/ திறந்தவெளிக்கிணறு தோண்டுவதற்கு ஆலோசனை சேவைகள் வழங்குதல்.
- தொகுக்கப்பட்ட குடிநீர் தொழில்கள், உள்கட்டமைப்பு மற்றும் தொழில் துறை நோக்கங்களுக்காக விதிகளின் படி நிலத்தடி நீர் எடுப்பதற்கு அனுமதி சான்று வழங்குதல்.
- நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் தொடர்பான தரவுகளை சேமித்தல் மற்றும் பிற துறைகளுக்கு பகிர்தல்.

### 2.1.6 தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்

- தமிழ்நாட்டின் அனைத்து ஆற்றுப் படுகைகளில் உள்ள நீர்வள ஆதாரங்களை நுண்ணிய அளவில் திட்டமிடுதல், மதிப்பிடுதல் மற்றும் நிர்வகித்தல்.
- வடிநில ஆற்றுப்படுகைகளுக்கான நுண்ணிய அளவிலான மறுஆய்வு பணிகளை மேற்கொள்ளுதல்.
- மேம்படுத்தப்பட்ட தொலையுணர்வு மையத்தின் மூலம் மாநிலத்தின் வடிநில மற்றும் உபவடிநில ஆற்றுப்படுகை வரைபடங்களை தயாரித்தல்.
- சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய 4 தரக்கட்டுப்பாடு கோட்டங்கள் இந்நிறுவனத்தின் கீழ் செயல்படுகின்றன.

## 2.1.7. தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமை இயக்குநர், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்

- நீர்வளத் துறை, வேளாண்மைத் துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு சிறந்த நீர் மேலாண்மைக்கான திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி அளித்தல்.
- இந்நிலையத்தினால் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பாசன மேலாண்மை, நிலத்தடி நீர் மேம்படுத்துதல் மற்றும் மேலாண்மை, கட்டுமானப் பொருட்களின் தரக் கட்டுப்பாடு மற்றும் தர உத்தரவாதம், பங்கேற்பு நீர்ப்பாசன மேலாண்மை மற்றும் கணிணி தொடர்பான AutoCAD, GIS, SWAT, Ms – Project போன்ற பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.
- மேலும், Total Station, பேரிடர் மேலாண்மை, வெள்ளம் மற்றும் வறட்சி மேலாண்மை, கடற்கரை நீரியல் மற்றும் கடல் நீர் ஊடுருவலைத் தடுத்தல், அணை பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கருவிகள் அமைத்தல் போன்ற தனிச்சிறப்பு வாய்ந்த பயிற்சிகள் இந்நிலையத்தால் அளிக்கப்படுகிறது.
- இப்பயிற்சி நிலையத்தின் மூலம், தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள முக்கியமான நீர் ஆதார கட்டமைப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய திட்டப்பணிகளுக்கு, நீர்வளத்துறை பொறியாளர்களுக்கான களப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

## 2.1.8. தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர், மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை

- இம்முகமை நீர் பங்கீடு, வடிநில நீர்மேம்பாடு மற்றும் திறன்மிகு நீர் மேலாண்மை அணுகுமுறையை செயல்படுத்துவது குறித்து அரசுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

## 2.2. தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்

- தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்களின் விவரங்கள் **இணைப்பு I** - இல் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், பாசனம் தொடர்பான விவரங்களை துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலகங்களை அணுகிப் பெறலாம்.

## 3.0. நீர்வளத் துறையின் சேவைகள்

## 3.1. அணைகள், நீர்த்தேக்கங்கள், அணைகட்டுகள், தடுப்பணைகள், கால்வாய்கள், ஏரிகள், குளங்கள் போன்றவற்றை கட்டுதல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல்

- புதிய பாசன உள்கட்டமைப்புகளை உருவாக்குவது என்பது திட்டங்களை செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளும் முன்பாக, சாத்தியக்கூறு ஆய்வு, மண் பரிசோதனைகள், விரிவான ஆய்வு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், செலவினத்திற்கான நிதி குறித்து மாநில / மத்திய அரசிடம் ஒப்புதல் பெறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.
- திட்டங்களை செயல்படுத்துவதற்கு, தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணிக்கு போதிய கால அவகாசம் தேவைப்படும்.
- ஒப்பந்த கால அளவானது 6 மாதம் முதல் 24 மாதம் வரை திட்டத்தின் மதிப்பு மற்றும் பணியை தொடங்கும் காலத்தை பொறுத்து மாறுபடும்.
- வெளிநாட்டு நிதி உதவி நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பெரிய திட்டங்கள் 6 முதல் 8 வருட காலத்தில் படிப்படியாக செயலாக்கப்படும்.
- அனைத்து பாசன உள்கட்டமைப்புகளில் புனரமைப்புப் பணிகள் பாசனமில்லாத காலங்களில் மட்டும் விரைந்து செயல்படுத்த இயலும்.

- ஏரிகள், வாய்க்கால்கள் மற்றும் உபரிநீர் செல்வழிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் சுற்றுசூழல் அனுமதி, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் அனுமதி பெறுதல் போன்றவையும் திட்டத்தின் கால அளவை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாகும்.
- ·பாசன அமைப்பின் கடைமடைப் பகுதி வரை பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்தலை உறுதி செய்யும் பொருட்டு காலமுறைப்படி பராமரிப்பு பணிகள் உரிய தரத்தில் குறித்த காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.2. சென்னை, மண்தன்மை மற்றும் ஆராய்ச்சிக் கோட்டம் வழங்கும் தொழில்நுட்ப கலந்தறி சேவைகள்

- சென்னை, தரமணியில் செயல்படும் மண்தன்மை மற்றும் ஆராய்ச்சிப் பரிசோதனைக் கூடங்கள் வாயிலாக, மண்தன்மை ஆய்வு, கற்காரை பரிசோதனைகள் மற்றும் கட்டுமானப் பொருட்களின் வேதியியல் தன்மைகளை பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றிற்கு கட்டண அடிப்படையில் தொழில்நுட்ப கலந்தறி சேவை அளிக்கப்பட்டு வருகின்றன.
- இச்சேவைகள் தொடர்பான கட்டண விவரம் மற்றும் ஆய்விற்கான கால அளவு போன்ற விவரங்கள் இணைப்பு II-இல் அளிக்கப்பட்டுள்ளன.

## 3.3. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் வழங்கும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள்

சென்னை தரமணியில் அமைந்துள்ள மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் மற்றும் அதன் கோட்டம், விவசாய பெருமக்கள் மற்றும் பொதுமக்களுக்கு கட்டண அடிப்படையில் பின்வரும் கலந்தறி ஆலோசனை சேவைகளை அளித்து வருகிறது.

அ. ஆழ்துளைக்கிணறு / திறந்தவெளிக்கிணறு அமைக்க தகுந்த இடம் தெரிவு செய்வதற்கான புவியமைப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

ஆ. மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் தரம் தொடர்பான ஆய்வுகள்.

இ. தரவுகளை பரிமாறுதல்.

இவ்வாய்வுகளுக்காக பெறப்படும் கட்டணங்கள் மற்றும் ஆய்வு செய்வதற்கான கால அளவுகள் போன்ற விவரங்கள் **இணைப்பு -III-**இல் அளிக்கப்பட்டுள்ளன.

## 3.4. பங்கேற்பு பாசன மேலாண்மை

- தமிழ்நாடு விவசாயிகள் அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம், 2000 (தமிழ்நாடு சட்டம் 7/2001) இயற்றப்பட்டு 01.10.2002 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த சட்டத்தின் அடிப்படையில் பின்வரும் விவசாய அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன:

  அ. முதல் நிலை - நீரினைப் பயன்படுத்துவோர்களைக் கொண்ட "நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம்."

  ஆ. இரண்டாம் நிலை - "பகிர்மானக் குழு."

  இ. திட்ட அளவில் "திட்டக் குழு."

  ஈ. உச்சநிலைக் குழு
- ·இந்த அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலக பொறுப்பாளர்கள் 5 ஆண்டுகள் மற்றும் 6 மாதங்கள் பொறுப்பில் இருப்பர்.
- இச்சட்டத்தின்படி அரசினால் விவசாயிகள் அமைப்பிற்கு தகுதிவாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.
- மீன்பாசி குத்தகை வருமானத்தை விவசாயிகள் அமைப்புகளுடன் பகிர்ந்துகொள்ள அரசு ஆணையிட்டுள்ளது.

## 3.5. நீர் வாரச் சந்தை (பாசன மதிப்பீடு மற்றும் செயல் திட்டம்)

- பாசன மதிப்பீடு மற்றும் செயல் திட்டம், பாசன மேலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையே நல்லிணக்கம் இருந்தால்தான் பாசன மேலாண்மை பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படும் என்கிற அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டுள்ளது. ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடன் செயல்பட்டு, இருக்கின்ற தகவல்களைப் பரிமாறி, அதனடிப்படையில் இணைந்த முடிவுகளை எடுத்தால்தான் இவ்வொத்துழைப்பு நிலைக்கும்
- ஆகவே, இந்நோக்கத்தை அடைய உரிய எல்லைக்குட்பட்ட உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர்களால் நீர் வாரச் சந்தை நடத்தப்பட்டு வருகிறது.

## 3.6. நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

### 3.6.1 தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம், 2007

- நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் மற்றும் அகற்றவும் அரசு "தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம் 2007" (தமிழ்நாடு சட்டம் எண்.8/2007) எனும் சட்டத்தை இயற்றி உள்ளது.
- இச்சட்டத்தை அமல்படுத்தும் அலுவலர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| நில அளவை அலுவலர் | நில அளவை மற்றும் நிலப் பதிவேடுகள் துறையில் நில அளவை அலுவலர் பணி நிலைக்குக் குறையாத பதவியில் உள்ள குறுவட்ட நில அளவையர் அல்லது நகர நில அளவையர் |

| | |
|---|---|
| நீர்வளத்துறையின் அலுவலர் | தனது கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளுக்குப் பொறுப்பான உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர், நீர்வளத் துறை |
| குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆக்கிரமிப்பாளர்களுக்கு வழங்கப்படும் தண்டனை | 3 மாதம் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறை தண்டனை அல்லது ரூபாய் 5000 அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து |

### 3.6.2. தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905

- அரசின் சொத்துக்களை அத்து மீறி ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905 இயற்றப்பட்டுள்ளது.

- அரசாணை (நிலை) எண்.2898, வருவாய்த்துறை, நாள் 03.12.1969-ன்படி துறையின் புறம்போக்கு நிலங்கள், வாய்க்கால்கள் மற்றும் ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான அதிகாரம் துறையின் உதவிப் பொறியாளர்களுக்கு (தற்போது உதவி செயற்பொறியாளர்கள்) மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

- இச்சட்டத்தின்படி நீர்வளத் துறையின் நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், செயல்முறை மற்றும் வழிமுறைகளை உருவாக்கவும் உதவிப் பொறியாளர் முதல் செயற் பொறியாளர் நிலை வரை பொறுப்புகளை நிர்ணயித்து அரசாணை (நிலை) எண். 540, வருவாய் [LD6(2)] துறை, நாள் 04.12.2014 மற்றும் அரசாணை (நிலை) எண்.148, வருவாய் [LD6(2)] துறை, நாள் 24.03.2016) ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 3.7. குறைகள் தீர்த்தல்

- பொதுமக்களிடமிருந்து உரிய ஒப்புகையுடன் கோரிக்கை மனுக்கள் பெறப்படுகின்றன. அவ்வாறு பெறப்படும் மனுக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் உரிய நபர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
- முதல்வரின் முகவரி துறையிலிருந்து (www.cmhelpline.tnega.org) பெறப்படும் மனுக்களை உரிய கள அதிகாரிகள் மூலம் தள ஆய்வு மற்றும் விசாரணை செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## 4.0. தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998

- 1998 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 11.12.1998 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டம், பொதுப் பணிகளில் ஒளிவுமறைவற்ற தன்மையை ஏற்படுத்துதல், ஒப்பந்தப் புள்ளிகளை கோருதல் மற்றும் ஏற்பது ஆகிய பணிகள் தொடர்பான நடைமுறைகளை வரையறுக்கிறது.

## 4.1. மின்னணு ஒப்பந்த முறை

- 10.00 இலட்சம் ரூபாய்க்கு மிகையான பணிகளுக்கான திறந்த நிலை ஒப்பந்த ஆவணங்களை மின்னணு மூலம் இலவசமாக வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## 4.2. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

- நீர்வளத்துறையில் ஒப்பந்த முறையில் பணிகளை மேற்கொள்வதற்கு வகுப்பு I முதல் வகுப்பு V வரை ஒப்பந்தக்காரர் பதிவு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.3. ஒப்பந்தப் புள்ளிகள் அறிவிப்பு வெளியிடுதல்

- 2 கோடி ரூபாய் மற்றும் அதற்கு குறைவான பணிகளின் மதிப்பு : 15 நாட்கள்
- 2 கோடி ரூபாய்க்கு மேலான பணிகளின் மதிப்பு : 30 நாட்கள்
- சில சிறப்பு நிகழ்வுகளில், பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப் புள்ளிகளை, அடுத்த உயர் அதிகாரியின் முன் அனுமதியுடன் தகுதிவாய்ந்த அலுவலர் கோரலாம்.

## 4.4. ஒப்பந்தப் புள்ளிகளை பரிசீலனை செய்வதற்கான கால அளவு

- ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளிலிருந்து ஒரு மாத காலம்.

## 5.0. அரசின் நீர் ஆதாரங்களிலிருந்து நீர் வழங்குதல்

## 5.1. பாசனப் பயன்பாடு

- பாசனத்திற்காக நீரினைப் பயன்படுத்துவோரிடமிருந்து தனிப்பட்ட தண்ணீர்த் தீர்வை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.
- நன்செய் நிலங்களுக்கு ஹெக்டேருக்கு 12 ரூபாய் மற்றும் புன்செய் நிலங்களுக்கு ஹெக்டேருக்கு 5 ரூபாய் மட்டும் நிலத் தீர்வையாக வருவாய்த் துறை வசூல் செய்கிறது.
- முறையற்ற பாசனத்திற்கு ஹெக்டேருக்கு 500 ரூபாயினை தண்டத்தீர்வையாக வருவாய்த் துறை வசூலிக்கிறது.

## 5.2. குடிநீர் பயன்பாடு / தொழிற்சாலை பயன்பாடு

- அரசு நீர் ஆதாரங்களிலிருந்து நாளொன்றுக்கு 1 மில்லியன் கேலன் அளவுக்குக் குறைவாக தண்ணீர் எடுப்பதற்கு வருவாய்த்துறையின் பரிந்துரையின்பேரில் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்தின் ஒத்திசைவுடன் அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.
- அரசு நீர் ஆதாரங்களிலிருந்து நாளொன்றுக்கு 1 மில்லியன் கேலன் மற்றும் அதற்கு மேல் நீர் எடுப்பதற்கு தொழில்நுட்ப துணைக்குழுவின் பரிந்துரை மீது நீர்ப் பயன்பாட்டுக் குழுவின் ஒப்புதலுக்குப் பின் நீர் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

## 6.0. மணல் குவாரி

- ஜூலை 2017-இல், தமிழகத்தில் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல் உபயோகிப்பாளர்களுக்கு தடையின்றி கிடைத்திட ஏதுவாக "தமிழ்நாடு மணல் இணைய சேவை" www.tnsand.in இணையதளத்தையும், "TNsand" செல்லிடப்பேசி செயலியையும் (App.) தொடங்கி வைக்கப்பட்டது.
- பொதுமக்களுக்கு இடையூறு இன்றி மணல் பதிவு செய்வதில் முக்கியத்துவம் அளிக்கும் வகையில், புதிய நடவடிக்கைகளை அரசு 06.01.2022 அன்று அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாட்டில் கட்டுமான பணிகளுக்காக பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மணல் அல்லது பிற மாநிலங்கள்/ஒன்றிய பகுதிகளிலிருந்து கொண்டு வரப்படும் மணல் நீர்வளத்துறையின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

## 7.0. வண்டல் மண்ணை இலவசமாக வழங்குதல்

- தமிழகத்தில் (சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக) ஏரிகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்களின் படுகைகளிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள நீர்நிலைகளிலிருந்து சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் முன் அனுமதி பெற்று இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.
- வேளாண் பயன்பாட்டிற்காக 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை வண்டல் மண் மற்றும் களிமண் அகற்றும் அளவு, நன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டருக்கு மிகாமலும் (ஹெக்டேருக்கு 185 கன மீட்டருக்கு மிகாமலும்) மற்றும் புன்செய் நிலங்களில் ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டருக்கு

மிகாமலும் (ஹெக்டேருக்கு 222 கன மீட்டருக்கு மிகாமலும்) இருக்க வேண்டும். வீடு சார்ந்த பயன்பாட்டிற்கு மண், சவுடு மற்றும் சரளை மண் எடுக்கும் அளவு 30 கன மீட்டருக்கு மிகாமலும், மட்பாண்டங்கள் செய்வதற்கு எடுக்கப்படும் களிமண் 60 கன மீட்டருக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

## 8.0. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005

- தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-இன்படி தகவல் அளிப்பதற்காக அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள் அலுவலகங்களிலும், பொது தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் உள்ளனர். அவர்களின் முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் தகவல்கள் இணைப்பு - IV-இல் அளிக்கப்பட்டுள்ளன.

# இணைப்பு - I

## தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில்

## தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள் பட்டியல்

| வ. எண். | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 1. | முதன்மைத் தலைமைப் பொறியாளர் (ம) தலைமைப் பொறியாளர் (பொது),<br>நீர்வளத் துறை, சேப்பாக்கம், சென்னை - 600 005.<br>தொலைபேசி எண்:044 - 2852 5351<br>நிகரி எண்: 044 - 2859 4148<br>மின்னஞ்சல்: eicwrdtn@gmail.com | 1. இணைத் தலைமைப் பொறியாளர், (பொது)<br>தொலைபேசி எண்: 044-2859 4145<br>2. இணைத் தலைமைப் பொறியாளர் (பாசனம்)<br>தொலைபேசி எண்: 044-2859 4144<br>3. கண்காணிப்புப் பொறியாளர், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம்.<br>தொலைபேசி எண்: 044-28418074<br>4. கண்காணிப்புப் பொறியாளர் (சுரங்கம் மற்றும் கண்காணிப்பு)<br>தொலைபேசி எண் 044 - 2841 4487<br>5. துணைத் தலைமைப் பொறியாளர்(பாசனம்) தொலைபேசி எண்: 044-2859 4144<br>6. துணைத் தலைமைப் பொறியாளர்(பொது)<br>தொலைபேசி எண்: 044-2859 4145 |

| வ. எண். | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 2. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>சென்னை மண்டலம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை-600 005.<br>தொலைபேசி எண்:044 - 2852 3007<br>நிகரி எண்:044-2852 3007<br>மின்னஞ்சல்:<br>cecrwropwd@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>சென்னை மண்டலம்.<br>தொலைபேசி எண்:044-2852 3007 |
| 3. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>திருச்சி மண்டலம்,<br>புதுக்கோட்டை சாலை,<br>த.பெ.எண்.803, சுப்பிரமணியபுரம்,<br>திருச்சிராப்பள்ளி - 620 020.<br>தொலைபேசி எண்:0431 - 2332287<br>நிகரி எண்:0431 - 2331148<br>மின்னஞ்சல்:<br>cetrydb@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>திருச்சி மண்டலம்.<br>தொலைபேசி எண்:0431-2332287 |
| 4. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>கோயம்புத்தூர் மண்டலம்,<br>கோயம்புத்தூர்-641 001.<br>தொலைபேசி எண்: 0422 - 2381804<br>நிகரி எண்:0422 - 2381801<br>மின்னஞ்சல்:<br>chiefwropwd@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>கோயம்புத்தூர் மண்டலம்.<br>தொலைபேசி எண்: 0422-2381803 |
| 5. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>மதுரை மண்டலம்,<br>தல்லாகுளம், மதுரை-625 002.<br>தொலைபேசி எண்:0452 - 2530326<br>நிகரி எண்:0452 - 2530826<br>மின்னஞ்சல்:<br>cewrodbmdu@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>மதுரை மண்டலம்<br>தொலைபேசி எண்:0452-2530326 |

| வ. எண். | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 6. | தலைமைப் பொறியாளர்,நீர்வளத் துறை,திட்ட உருவாக்கம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை-600 005.<br>தொலைபேசி எண்:044 - 2852 5662<br>நிகரி எண்:044 - 28525662<br>மின்னஞ்சல்:<br>ceplanformulation@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>திட்ட உருவாக்கம்<br>தொலைபேசி எண்:044-28525662 |
| 7. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,வடிவமைப்பு,<br>ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்,சேப்பாக்கம்,<br>சென்னை-600 005.<br>தொலைபேசி எண்:044 - 2841 3381<br>மின்னஞ்சல்:<br>cedrcsoffice@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்<br>தொலைபேசி எண்:044-28413381 |
| 8. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,இயக்கம் மற்றும் பராமரிப்பு,சேப்பாக்கம்,<br>சென்னை-600 005.<br>தொலைபேசி எண்: 044 -28415557<br>மின்னஞ்சல்:<br>ceomwro@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>இயக்கம் மற்றும் பராமரிப்பு<br>தொலைபேசி எண்:044-2841 5557 |
| 9. | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி,<br>சென்னை-600 113.<br>தொலைபேசி எண்:044-22541526<br>22541527<br>நிகரி எண்:044 - 22541368<br>மின்னஞ்சல்:<br>cegwchennai@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர்,<br>மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்<br>தொலைபேசி எண்:044-22542072 |

| வ. எண். | அலுவலகத்தின் பெயர் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 10. | தலைமைப் பொறியாளர் (ம)<br>இயக்குநர்,<br>நீர்வளத் துறை,நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்,<br>தரமணி, சென்னை-600 113.<br>தொலைபேசி எண்:044 - 2254 2380<br>நிகரி எண்:044 - 22542360<br>மின்னஞ்சல்:<br>ceiwshqcwrd@gmail.com | இணை இயக்குநர்,<br>நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்,<br>தொலைபேசி எண்:044-22542674 |
| 11. | தலைமைப் பொறியாளர் (ம)<br>தலைமை இயக்குநர், நீர்வளத் துறை,<br>பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், துவாக்குடி,<br>திருச்சிராப்பள்ளி - 620 015.<br>தொலைபேசி எண்:0431-2500500<br>நிகரி எண்:0431 - 2501110<br>மின்னஞ்சல்:<br>tnimtitrichy@gmail.com | இணை இயக்குநர்,<br>பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்<br>தொலைபேசி எண்:0431-2500603 |
| 12. | தலைமைப் பொறியாளர் (ம)<br>இயக்குநர், மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA),<br>நீர்வளத் துறை,<br>தரமணி, சென்னை - 600 113.<br>தொலைபேசி எண்:044 - 2254 0135<br>மின்னஞ்சல்:<br>swarmatn@gmail.com | செயற் பொறியாளர்,<br>மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA), நீர்வளத் துறை,<br>தொலைபேசி எண்:044-22540135 |

## இணைப்பு - II

## மண் தன்மை மற்றும் ஆராய்ச்சி கோட்டம், சென்னை

## மேற்கொள்ளும் பரிசோதனைகளின் விவரங்கள்

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| மண் பரிசோதனைகள் | | | | |
| I | களப் பரிசோதனைகள் | | | |
| 1. | தரைமட்டத்தில் இருந்து 15 மீ ஆழம் வரை துளையிட்டு செந்தர ஊடுருவு சோதனை செய்தல் | 10,000 | ஒரு துளைக்கு | 15 நாட்கள் |
| 2. | தரைமட்டத்தில் இருந்து 15 மீ ஆழம் வரை துளையிட்டு செந்தர நிலை கூம்பு / இயங்கு கூம்பு ஊடுருவு சோதனை செய்தல் | 5,000 | ஒரு துளைக்கு | 15 நாட்கள் |
| 3. | நில அடுக்கு படிவத்தின் ஊடுருவு தன்மை பரிசோதித்தல் | 2,000 | ஒரு புள்ளிக்கு | 7 நாட்கள் |

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| 4. | ஊடுருவும் தன்மை பரிசோதித்தல் | 3,000 | ஒரு புள்ளிக்கு | 4 நாட்கள் |
| II | ஆய்வுக் கூடப் பரிசோதனைகள் | | | |
| 5. | மண் குறியீடு மற்றும் நெகிழ்வுத் தன்மைகள் குறித்த பரிசோதனை | 2,000 | ஒரு மண் மாதிரிக்கு | 10 நாட்கள் |
| 6. | நேர் வெட்டு பரிசோதனை | 500 | ஒரு மண் மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 7. | பக்கவாட்டில் தடுக்கப்படாத அழுத்த வலிமை சோதனை | 500 | ஒரு மண் மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 8. | மண்மாதிரியின் நீர் ஊடுருவும் தன்மையை சோதித்தல் | 500 | ஒரு மண் மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 9. | மண் மாதிரியின் திடமாகும் திறன் கண்டறிதல் | 5,000 | ஒரு மண் மாதிரிக்கு | 15 நாட்கள் |

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| 10. | மண் மாதிரியின் ப்ராக்டர் கெட்டிப்படுத்தும் திறன் கண்டறிதல் | 1,000 | ஒரு மண் மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 11. | மண் மாதிரியின் மாறுபட்ட வீக்க அழுத்தம் கண்டறியும் சோதனை | 500 | ஒரு மண் மாதிரிக்கு | 3 நாட்கள் |
| 12. | மண் மாதிரியின் வீக்க அழுத்தம் கண்டறியும் சோதனை | 5,000 | ஒரு மண் மாதிரிக்கு | 15 நாட்கள் |
| 13 | முவ்வெட்டு பரிசோதனை **(UU/CU)** | 2000 | ஒரு மண் மாதிரிக்கு | 3/15 நாட்கள் |
| 14 | பிற பரிசோதனை | 500 | ஒரு மண் மாதிரிக்கு | |
| வேதியியல் பகுப்பாய்வு பரிசோதனைகள் | | | | |
| 1. | சிமெண்ட் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | 5,000 | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| **2.** | சுண்ணாம்பு வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | **7** நாட்கள் |
| **3.** | நீர் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | **3** நாட்கள் |
| **4.** | சுட்ட செங்கற்தூள் / எரிசாம்பல் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | **7** நாட்கள் |
| **5.** | மணல் / செயற்கை மணல்வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **5,000** | ஒரு மாதிரிக்கு | **7** நாட்கள் |
| **6.** | மண் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **6,000** | ஒரு மாதிரிக்கு | **7** நாட்கள் |
| **7.** | கலவை வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **3,000** | ஒரு மாதிரிக்கு | **7** நாட்கள் |
| **8.** | பாறை மாதிரி வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | **10,000** | ஒரு மாதிரிக்கு | **7** நாட்கள் |

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| 9. | நீரின் கட்டுமான பயன்பாடு குறித்த வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | 2,000 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| 10. | குடிநீர் உபயோகம் , வீட்டு உபயோகம் மற்றும் தொழிற்சாலை உபயோகம் குறித்த நீர் வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | 3,000 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| 11. | மண்ணின் கரைத்து சிதைக்கவல்ல தன்மை குறித்த வேதியியல் பகுப்பாய்வு செய்தல் | 2,500 | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 12 | பிற பரிசோதனை | 500 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| கற்காரை பரிசோதனைகள் | | | | |
| I | கள பரிசோதனைகள் | | | |
| 1. | எதிர்வீச்சு சுத்தி சோதனை | 50 | ஒரு புள்ளிக்கு | 7 நாட்கள் |

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| 2. | கேளா ஒலி துடிப்பு வேக கருவி சோதனை | 75 | ஒரு புள்ளிக்கு | 7 நாட்கள் |
| 3. | வலு கம்பி விவர வருடி சோதனை | 75 | ஒரு புள்ளிக்கு | 7 நாட்கள் |
| 4. | கற்காரை பாகத்தை வெட்டி இறுக்க வலிமை சோதனை | 900 | ஒரு சோதனைக்கு | 15 நாட்கள் |
| II | ஆய்வுக் கூடப் பரிசோதனைகள் | | | |
| 1. | கற்காரை இறுக்க வலிமை சோதனை | 150 | ஒரு சோதனைக்கு | 2 நாட்கள் |
| 2. | எஃகு கம்பிகளுக்கான பரிசோதனைகள் விறைப்பு வலிமை, அலகு எடை, நீட்சி சதவீதம் மற்றும் 0.25% திட்ட தகைவு | 600 | ஒரு சோதனைக்கு | 2 நாட்கள் |
| 3. | பெருஞ்ஜல்லிக்கான பரிசோதனைகள் | | | |

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| அ) | சல்லடை பகுப்பாய்வு | 1,200 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| ஆ) | ஒப்படர்த்தி மற்றும் நீர் உறிஞ்சும் தன்மை | 500 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| இ) | சிராய்த்தல் சோதனை | 1,000 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| ஈ) | நொறுக்குதல் சோதனை | 1,000 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| உ) | கனத்தாக்கு சோதனை | 1,000 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| 4. | மணலுக்குரிய பரிசோதனைகள் | | | |
| அ) | சல்லடை பகுப்பாய்வு | 1,200 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| ஆ) | ஒப்படர்த்தி மற்றும் நீர் உறிஞ்சும் தன்மை | 500 | ஒரு மாதிரிக்கு | 3 நாட்கள் |
| இ) | வண்டல் மற்றும் களிமண் அளவீடுகள் | 500 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| ஈ) | கரிம மாசுகள் கண்டறிதல் | 500 | ஒரு சோதனைக்கு | 3 நாட்கள் |
| 5. | சிமெண்டுக்குரிய பரிசோதனைகளான நிலைப்புத்தன்மை சோதனை, தொடக்க மற்றும் இறுதி நிலை இறுகல் கால அளவு சோதனை, அழுத்த வலிமை சோதனை மற்றும் உடைபடா நிலை சோதனை | 3,000 | ஒரு மாதிரிக்கு | 30 நாட்கள் |
| 6. | செங்கல் / எரிசாம்பல் செங்கற்களுக்குரிய பரிசோதனைகளான தூள் பூத்தல் சோதனை, நீர் உறிஞ்சும் தன்மை மற்றும் அழுத்த வலிமை சோதனை | 2,000 | ஒரு மாதிரிக்கு | 10 நாட்கள் |

| வ. எண். | பரிசோதனையின் விவரம் | பரிசோதனை கட்டணம் (ரூபாய்) | அலகு | கால அளவு |
|---|---|---|---|---|
| 7. | கற்காரை கலவை வடிவமைத்தல் | 20,000 | ஒரு சோதனைக்கு | 40 நாட்கள் |
| 8. | தள மற்றும் தட்டு ஓடுகளுக்கான பரிசோதனையான நீர் உறிஞ்சும் தன்மை மற்றும் வளைவு வலிமை சோதனை | 2,500 | ஒரு மாதிரிக்கு | 7 நாட்கள் |
| 9. | சுண்ணாம்பின் இயற்பண்புகள் சோதனைகள் | 3,000 | ஒரு மாதிரிக்கு | 30 நாட்கள் |
| 10. | எரிசாம்பலில் சுண்ணாம்பின் வினைதிறன் சோதனை | 2,000 | ஒரு மாதிரிக்கு | 30 நாட்கள் |

## இணைப்பு – III

## மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு வையம் வழங்கும் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் மேற்கொள்ளும் பரிசோதனைகளின் விவரங்கள்

| வ. எண். | ஆய்வுகளின் விவரம் | ஆய்வு கட்டணம் (ரூபாய்) | அளவு | காலம் |
|---|---|---|---|---|
| **களஆய்வுகள்** | | | | |
| 1 | விவசாயிகளுக்காக துளைக்கிணறு அமைக்க இடத்தேர்வு செய்ய புவிஇயற்பியல் ஆய்வு மேற்கொள்ளுதல் | 500/- | ஒரு இடம் தேர்வு | 1 வாரம் |
| 2 | விவசாயிகளுக்காக திறந்தவெளி கிணறு அமைக்க புவிஇயற்பியல் ஆய்வு மேற்கொள்ளுதல் | 500/- | ஒரு இடம் தேர்வு | 1 வாரம் |
| 3 | பொதுமக்களுக்காக துளைக்கிணறு அமைக்க புவிஇயற்பியல் ஆய்வு மேற்கொள்ளுதல் | 1000/- | ஒரு இடம் தேர்வு | 1 வாரம் |
| 4 | பொதுமக்களுக்காக திறந்தவெளி கிணறு அமைக்க புவிஇயற்பியல் ஆய்வு மேற்கொள்ளுதல் | 1000/- | ஒரு இடம் தேர்வு | 1 வாரம் |

| வ. எண். | ஆய்வுகளின் விவரம் | ஆய்வு கட்டணம் (ரூபாய்) | அளவு | காலம் |
|---|---|---|---|---|
| 5 | புவி இயற்பியல் மின் கருவிகள் (போக்குவரத்து செலவினம் ரூ. 17 / கி.மீ) | 2000/- | ஒரு இடம் தேர்வு | 2 வாரம் |
| | | **ஆய்வக பரிசோதனை** | | |
| 5 | இயல் வேதியியல் பரிசோதனைகள் மூலம் கொடுக்கப்பட்ட நீர்மாதிரிகள், குடிக்க / விவசாயம் / கட்டுமான பயன்பாட்டிற்கு ஏற்றதா? இல்லையா? என்று பொதுமக்கள் / மாணவர்கள் / ஆராய்ச்சியாளர்கள்/ நிறுவனங்கள் முதலானவர்களுக்கு கட்டண அடிப்படையில் ஆய்வு செய்து தரப்படுகிறது. | 250/- | ஒரு நீர் மாதிரிக்கு | 1 வாரம் |
| | | **தரவுகள் அளித்தல்** | | |
| 6 | மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் (**கல்வி நோக்கங்களுக்காக மட்டுமே**) | 100/- | ஒரு வகை விவரம் / ஒரு வருடத்திற்கு / ஒரு மாவட்டம் | 1 வாரம் |

| வ. எண். | ஆய்வுகளின் விவரம் | ஆய்வு கட்டணம் (ரூபாய்) | அளவு | காலம் |
|---|---|---|---|---|
| 7 | அரசுசாரா நிறுவனம் | 200/- | ஒரு வகை விவரம் / ஒரு வருடத்திற்கு / ஒரு மாவட்டம் | 1 வாரம் |
| 8 | திட்ட ஆலோசகர் | 300/- | ஒரு வகை விவரம் / ஒரு வருடத்திற்கு / ஒரு மாவட்டம் | 1 வாரம் |
| 9 | தனியார் நிறுவனங்கள் | 500/- | ஒரு வகை விவரம் / ஒரு வருடத்திற்கு / ஒரு மாவட்டம் | 1 வாரம் |
| 10 | அரசு துறைகள் | கட்டணமில்லை | | |
| நிலநீர் தடையில்லாச் சான்று | | | | |
| 11 | பாதுகாப்பான மற்றும் மித அபாயகரமான குறுவட்டங்களில் தொழிற்சாலைகளுக்கு வர்த்தக ரீதியாக நிலத்தடி நீரை எடுத்து பயன்படுத்த தடையில்லா சான்று (NOC) வழங்குதல். | 6000/- | ஓர் துளைக் கிணறு /திறந்தவெளி கிணறு | 40 நாட்கள் |

## இணைப்பு - IV

### பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 1 | முதன்மைத் தலைமைப் பொறியாளர் (ம) தலைமைப் பொறியாளர் (பொது),<br>நீர்வளத் துறை, சேப்பாக்கம்,<br>சென்னை - 5. | 1. செயற்பொறியாளர்,<br>நீர்வளத் துறை (தொழில்நுட்பம்)<br>**தொலைபேசி எண்** : 044 - 28525351 Extn. 209<br>**மின்னஞ்சல்** : rtipio1eicwrdoffice@gmail.com<br><br>2. முதன்மை பணியாளர் அலுவலர்,<br>நீர்வளத் துறை (பொது),<br>**தொலைபேசி எண்** : 044 - 28525351<br>**மின்னஞ்சல்:** jceglpwd@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர், (பாசனம்), நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044-28594144<br>**மின்னஞ்சல்** : eicwrdtn@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 2 | கனிமம் மற்றும் கண்காணிப்பு வட்டம், நீர்வளத் துறை, சேப்பாக்கம், சென்னை - 5. | உதவிப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044 -28414487<br>**மின்னஞ்சல்** : semmcirclechennai@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044-28414487<br>**மின்னஞ்சல்** : semmcirclechennai@gmail.com |
| | **சென்னை மண்டலம்** | | |
| 3 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை, சென்னை மண்டலம்,<br>சென்னை - 5 | துணைத் தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044 - 28410402<br>**மின்னஞ்சல்** : cecrwrdoffice@gmail.com | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்**: 044 - 28414150, 28523007<br>**மின்னஞ்சல்**: cecrwrdoffice@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 4 | பெண்ணையாறு வடிநில வட்டம்,<br>நீர்வளத் துறை,<br>திருவண்ணாமலை - 606 603. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்**: 04175 – 236921<br>**மின்னஞ்சல்**<br>sepbc52@yahoo.co.in<br>sepbctvmalai2007@rediffmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்**: 04175 – 236921<br>**மின்னஞ்சல்:**<br>sepbc52@yahoo.co.in<br>sepbctvmalai2007@rediffmail.com |
| 5 | வெள்ளாறு வடிநில வட்டம்,<br>நீர்வளத் துறை, கடலூர் - 1. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 04142 – 230323<br>மின்னஞ்சல் : sepwdcud@yahoo.co.in | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 04142 – 230323<br>மின்னஞ்சல் : sepwdcud@yahoo.co.in |
| 6 | பாலாறு வடிநில வட்டம், நீர்வளத் துறை, சேப்பாக்கம், சென்னை - 600 005. | துணை கண்காணிப்புப் பொறியாளர்<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044 – 28591231<br>மின்னஞ்சல்:<br>sepbcwrd@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044 – 28591231<br>மின்னஞ்சல் : sepbcwrd@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| | **திருச்சிராப்பள்ளி மண்டலம்** | | |
| 7 | தலைமைப் பொறியாளர்அலுவலகம், நீர்வளத் துறை, திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி-20. | தலைமை வரைதொழில் அலுவலர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0431-2331411<br>**மின்னஞ்சல்:** cetrydb@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளார்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0431-2331411<br>**மின்னஞ்சல்:** cetrydb@gmail.com |
| 8 | மேல்காவிரி வடிநில வட்டம், நீர்வளத் துறை, சேலம். | துணை கண்காணிப்புப் பொறியாளார்<br>**தொலைபேசி எண்**. 0427-2413474<br>**மின்னஞ்சல்**: uppercauvery@gmail.com | கண்காணிப்புப்பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0427-2413474<br>**மின்னஞ்சல்:**uppercauvery@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 9 | நடுக்காவிரி வடிநில வட்டம், நீர்வளத் துறை, திருச்சிராப்பள்ளி - 20 | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0431-2331860, **மின்னஞ்சல் :** semcbctry@yahoo.co.in | கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0431-2331860, **மின்னஞ்சல்**: semcbctry@yahoo.co.in |
| 10 | கீழ்காவிரி வடிநில வட்டம், நீர்வளத் துறை, தஞ்சாவூர். | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 04362-230133 **மின்னஞ்சல்:** selcbtnj@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 04362-230133 **மின்னஞ்சல்:** selcbtnj@gmail.com |
| | **மதுரை மண்டலம்** | | |
| 11 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை, மதுரை மண்டலம், மதுரை - 625 002 | தலைமை வரை தொழில் அலுவலர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0452 - 2530 326 **மின்னஞ்சல்:** cepimmdu@gmail.com cewrodbmdu@gmail.com | துணைத் தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0452-2530 326 **மின்னஞ்சல்:** cepimmdu@gmail.com cewrodbmdu@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 13 | கீழ்வைகை வடிநில வட்டம், நீர்வளத் துறை, சிவகங்கை - 630 562. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 04575 - 240304 **மின்னஞ்சல்**: selvbsva@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 04575 - 240304 **மின்னஞ்சல்:** selvbsva@gmail.com |
| 14 | வைப்பாறு வடிநில வட்டம், நீர்வளத் துறை, விருதுநகர்-626001. | கூடுதல் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்), நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 04562-247132 **மின்னஞ்சல்:** sevbcvnr@gmail.com | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 04562-247132 **மின்னஞ்சல்**: sevbcvnr@gmail.com |
| 15 | தாமிரபரணி வடிநில வட்டம், நீர்வளத் துறை, திருநெல்வேலி - 2. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0462 - 2574232 , 2574832 **மின்னஞ்சல்:** setbctvl@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0462-2574232, **மின்னஞ்சல்**: setbctvl@gmail.com |
| 16 | திட்டங்கள் வட்டம், நீர்வளத் துறை, திருநெல்வேலி - 627 002. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0462 - 2573303 **மின்னஞ்சல்:** sepctin@yahoo.co.in | கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0462-2573303 **மின்னஞ்சல்:** sepctin@yahoo.co.in |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| | **கோயம்புத்தூர் மண்டலம்** | | |
| 17 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் - 641 001. | துணை தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0422 - 2381802, 2381803<br>**மின்னஞ்சல்**: chiefwropwd@gmail.com | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0422-2381802, 2381803<br>**மின்னஞ்சல்:** chiefwropwd@gmail.com |
| 18 | பரம்பிக்குளம் ஆழியாறு வடிநில வட்டம், நீர்வளத் துறை, பொள்ளாச்சி-642003. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 04259 - 237916<br>**மின்னஞ்சல்:** sewropoy@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 04259 - 237916<br>**மின்னஞ்சல்:** sewropoy@gmail.com |
| 19 | சிறப்பு திட்டங்கள் வட்டம், நீர்வளத் துறை, பழனி- 624 601. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 04545 - 250148<br>**மின்னஞ்சல்:** sewropalani@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 04545 - 250148<br>**மின்னஞ்சல்**: sewropalani@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 20 | பவானி வடிநில வட்டம், நீர்வளத் துறை, ஈரோடு - 638 002 | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0424 - 2255244<br>**மின்னஞ்சல்:** sewroerode@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0424-2255244<br>**மின்னஞ்சல்:**<br>sewroerode@gmail.com |
| 21 | சிறப்பு திட்டங்கள் வட்டம், நீர்வளத் துறை, அவிநாசி- 641654. | முதன்மை தலைமை வரை தொழில் அலுவலர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 04296-274552<br>**மின்னஞ்சல்**:<br>aeesplprojectsubdn2avi@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 04296-274552<br>**மின்னஞ்சல்:**<br>sewrdavinashi@gmail.com |
| | **திட்ட உருவாக்கம்** | | |
| 22 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை, திட்ட உருவாக்கம், சென்னை-5. | துணை தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044 - 2852 5662<br>**மின்னஞ்சல்:**<br>ceplanformulation@gmail.com | தலைமைப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044-2852 5662<br>**மின்னஞ்சல்**:<br>ceplanformulation@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 23 | திட்ட உருவாக்க வட்டம், நீர்வளத் துறை, குமாரசாமிபட்டி, சேலம் - 636007. | ஆட்சி அலுவலர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0427–2417452<br>**மின்னஞ்சல்:** sepfsalem@rediffmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0427-2417452<br>**மின்னஞ்சல்:**sepfsalem@rediffmail.com |
| 24 | திட்ட உருவாக்க வட்டம், நீர்வளத் துறை, திருச்சிராப்பள்ளி. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0431 - 2333415<br>**மின்னஞ்சல்:** sepftry2002@yahoo.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0431 - 2333415<br>**மின்னஞ்சல் :** sepftry2002@yahoo.com |
| 25 | சுற்றுச் சூழல் குழும வட்டம், நீர்வளத் துறை, திருச்சிராப்பள்ளி - 620020. | துணை கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 0431 - 2316219<br>**மின்னஞ்சல் :** seenvctry@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர்,<br>நீர்வளத் துறை,<br>**தொலைபேசி எண்** : 044-2852 5662<br>**மின்னஞ்சல்:** seenvctry@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| | **வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்** | | |
| 26 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை, வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சேப்பாக்கம், சென்னை - 600 005. | தலைமை வரைதொழில் அலுவலர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044-28410403 **மின்னஞ்சல்** : cedrcsoffice@gmail.com | இணைத் தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044-28410403 **மின்னஞ்சல்**: cedrcsoffice@gmail.com |
| 27 | வடிவமைப்பு வட்டம், நீர்வளத் துறை, சேப்பாக்கம், சென்னை-5. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044 - 28414074 **மின்னஞ்சல்** : sedesignstnpwdwrd@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044- 28414074 **மின்னஞ்சல்** : sedesignstnpwdwrd@gmail.com |
| 28 | நீரியல் மற்றும் நீர் விசையியல் நிறுவனம், நீர்வளத் துறை, பூண்டி - 602023. இணையதளம் : www.tnwrdihhpoondi.in | உதவி இயக்குநர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044-27639924 **மின்னஞ்சல்**: **ddihhpoondi@gmail.com** | கண்காணிப்புப் பொறியாளர் / இயக்குநர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044-27639924 **மின்னஞ்சல்**: **seihhpoondi@gmail.com** |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| | இயக்கம் (ம) பராமரிப்பு | | |
| 29 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை, இயக்கம் (ம) பராமரிப்பு, சேப்பாக்கம், சென்னை-5. | இணைத் தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044 - 28415557 **மின்னஞ்சல்**: ceomwro@gmail.com | தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044 - 28415552 **மின்னஞ்சல்**: ceomwro@gmail.com |
| 30 | பணிமனை மற்றும் பண்டக சாலை வட்டம், நீர்வளத் துறை, சேப்பாக்கம், சென்னை-5. | உதவி செயற்பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 044-28548690 **மின்னஞ்சல்** : seworkshoppwd@yahoo.com | கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்**: 044-28548690 **மின்னஞ்சல்**: seworkshoppwd@yahoo.com |
| 31 | மாநில திட்ட மேலாண்மை அலகு, அணைகள் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் திட்டம்(DRIP), IWS வளாகம், தரமணி, சென்னை-113. | செயற்பொறியாளர் (கொள்முதல்), நீர்வளத் துறை, தொலைபேசி எண் : 0441 2999 2354 மின்னஞ்சல்: tnspmu@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் திட்ட இயக்குநர், நீர்வளத் துறை. தொலைபேசி எண் : 044-2999 2354 மின்னஞ்சல்: tnspmu@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 32 | அணைகள் பாதுகாப்பு இயக்ககம், நீர்வளத் துறை, சேப்பாக்கம், சென்னை-5. | துணை கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, தொலைபேசி எண் : 044 - 28548269 மின்னஞ்சல்:tndamsafety@gmail.com | கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் இயக்குநர், நீர்வளத் துறை, தொலைபேசி எண் : 044-28548269 மின்னஞ்சல்: tndamsafety@gmail.com |
| | **நீர் ஆய்வு, நீரியியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்** | | |
| 33 | தலைமைப் பொறியாளர் (ம) இயக்குனர் அலுவலகம், நீர்வளத் துறை, நீர் ஆய்வு, நீரியியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம், தரமணி, சென்னை - 113. | செயற் பொறியாளர், (கோட்டம் -II), நீர்வளத் துறை, **தொலைபேசி எண்.** 044-22542380 Extn. 108 **மின்னஞ்சல்:** cengrdiriwshqc.pwd@tn.gov.in | தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்.** 044-22542380 **மின்னஞ்சல்:** cengrdiriwshqc.pwd@tn.gov.in |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| | **மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்** | | |
| 34 | தலைமைப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, சென்னை-600 113. | **தொழில் நுட்ப வல்லுநர்,** (நிலநீரியல்) **நீர்வளத் துறை,** **தொலைபேசி எண் :** 044- 2254 1526, 22541527 **மின்னஞ்சல்:** cegwchennai@gmail.com | **இணைத் தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை,** **தொலைபேசி எண்** : 044-2254 2072 **மின்னஞ்சல்:** cegwchennai@gmail.com |
| 35 | நிலநீர் வட்டம், நீர்வளத் துறை, தரமணி, சென்னை -113. | **துணை இயக்குநர்,** (நிலநீரியல்) **நீர்வளத் துறை, சென்னை.** **தொலைபேசி எண்** : 044-22541591 **மின்னஞ்சல்**: gwcchn@gmail.com | **கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை, சென்னை.** **தொலைபேசி எண்** : 044-22541591 **மின்னஞ்சல்:** gwcchn@gmail.com |
| 36 | நிலநீர் வட்டம், நீர்வளத் துறை, தஞ்சாவூர் - 613 007. | **துணை இயக்குநர்** (நிலநீரியல்) **நீர்வளத் துறை,** **தொலைபேசி எண்** : 04362 - 271276 **மின்னஞ்சல்** : gwcthanjai@gmail.com | **கண்காணிப்புப் பொறியாளர், நீர்வளத் துறை,** **தொலைபேசி எண்** : 04362 - 271276 **மின்னஞ்சல்** : gwcthanjai@gmail.com |

| வ. எண் | அலுவலக முகவரி | பொதுத்தகவல் அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் மின்னஞ்சல் முகவரி | மேல்முறையீட்டு அலுவலரின் பதவிப் பெயர் தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| 37 | நிலநீர் வட்டம், நீர்வளத் துறை, மதுரை - 625002. | உதவி செயற் பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0452- 2531208 **மின்னஞ்சல்:** gwcmdu@gmail.com | கண்காணிப்புப்பொறியாளர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0452 -2531208 **மின்னஞ்சல்** : gwcmdu@gmail.com |
| | **பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்** | | |
| 38 | தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமை இயக்குநர் அலுவலகம், பாசன மேலாண்மை பயிற்சி நிலையம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி-620015. | ஆட்சி அலுவலர், நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** 0431 -2500500 **மின்னஞ்சல்:** tnimtitrichy@gmail.com | இணை இயக்குநர், (பயிற்சி) நீர்வளத் துறை, **தொலைபேசி எண்** : 0431 -2500603 **மின்னஞ்சல்:** tnimtitrichy@gmail.com |
| | **மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை** | | |
| 39 | தலைமைப் பொறியாளர் (மற்றும்) இயக்குநர் அலுவலகம், நீர்வளத் துறை. மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA), தரமணி, சென்னை - 600 113. | செயற் பொறியாளர், மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை அலுவலகம் (SWaRMA), **தொலைபேசி எண்**:044-22540135. **மின்னஞ்சல்** : swarmatn@gmail.com | தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர், மாநில நீர்வள ஆதார மேலாண்மை முகமை அலுவலகம் (SWaRMA), தரமணி, சென்னை - 600 113. **தொலைபேசி எண்**:044 - 2254 0135 **மின்னஞ்சல்**: swarmatn@gmail.com |